இரட்சிப்பின் நிச்சயம்

அருமை விசுவாசியே,

நமது மீட்பர் இயேசுவின் விலையேறப் பெற்ற நம்பத்தகும் பெயரில் உனக்கு நல் வாழ்த்துக்கள்.

அண்மையில் என் நண்பன் ஒருவன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். அவன் ஜெபித்து, தன் பாவங்களுக்காக மனவருத்தப்பட்டு, ஆண்டவர் தன் பாவங்களை மன்னிக்கவும், தன்னை அவருடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்ளவும் வேண்டினான்.

சில நாட்கள் சென்ற பிறகு அவனை நான் சந்தித்தேன். அவனிடம் "நீ கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதைக் குறித்து மகிழ்ச்சிதானா?" என்று கேட்டேன். அவன் "ஆம் அதைக் குறித்து மகிழ்ச்சிதான்" என்றான். நான் அவனிடம் "இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்று உனக்கு நிச்சயமாய் தெரியுமா?" என்று கேட்டேன்.

"எனக்குத் தெரியாது" என்றான் அவன்.
"ஏன் என்று" அவனைத் திரும்பக் கேட்டேன்.

அவன் சொன்ன பதில் "வாழ்க்கையில் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. பாவங்களில் விழாமல் இருக்க முடியவில்லை. இந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுமா இல்லையா என்று திட்டமாகத் தெரியவில்லை."

பலருக்கு இவ்வகைச் சந்தேகங்கள் எழும்புவது உண்டு. இரட்சிக்கப்படுவது என்றால் என்ன என்று அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. பலருக்கு இரட்சிப்பின் நிச்சயம் பெறக்கூடும் என்பதே தெரியவில்லை.

வேதம் இரட்சிப்பை மூன்று காலங்களில் கூறுகிறது. ஒரு வகையில் மறுபிறப்படைந்தவன் ஏற்கெனவே இரட்சிக்கப் பட்டாயிற்று. பாவத்தின் குற்றப்படுத்தலினின்றும், தண்டனையினின்றும், நாம் இரட்சிக்கப்பட்டாயிற்று. இயேசு கிறிஸ்துவை நீ ஏற்றுக் கொண்டதால் நரகாக்கினைத் தீர்ப்புக்கு நீ உட்பட்டவனல்ல. ஆனாலும் விசுவாசி ஒரு சில பாவங்களின் பிடியில் சிக்கியுள்ளவனாகவும் நாள்தோறும் அப்பிடிகளிலிருந்து விடுதலை பெற வேண்டியவனாகவும் இருக்கிறான். பாவத்தின் வலிமையிலிருந்து நாள்தோறும் அவன் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான். இறுதியாக கிறிஸ்துவை நாம் சந்திக்கும் போது பாவத்தின் முன்னிலையிலிருந்தே இரட்சிக்கப்படுவோம்.

அப்படியானால் நமது இரட்சிப்பைக் குறித்து நிச்சயமில்லை என்று பொருளா? அல்ல. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்கிறார் பவுல் (எபேசியர் 2 : 8). கிறிஸ்துவை நீ நம்பி ஏற்றுக் கொண்டிருக்கிறாய் என்றால் நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இரட்சிப்பின் நிச்சயம்

அருமை விசுவாசியே,

நமது மீட்பர் இயேசுவின் விலையேறப் பெற்ற நம்பத்தகும் பெயரில் உனக்கு நல் வாழ்த்துக்கள்.

அண்மையில் என் நண்பன் ஒருவன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். அவன் ஜெபித்து, தன் பாவங்களுக்காக மனவருத்தப்பட்டு, ஆண்டவர் தன் பாவங்களை மன்னிக்கவும், தன்னை அவருடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்ளவும் வேண்டினான்.

சில நாட்கள் சென்ற பிறகு அவனை நான் சந்தித்தேன். அவனிடம் "கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதைக் குறித்து மகிழ்ச்சிதானா?" என்று கேட்டேன். அவன் "ஆம் அதைக் குறித்து மகிழ்ச்சிதான்" என்றான். நான் அவனிடம் "இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்று உனக்கு நிச்சயமாய் தெரியுமா?" என்று கேட்டேன்.

"எனக்குத் தெரியாது" என்றான் அவன்.
"ஏன் என்று" அவனைத் திரும்பக் கேட்டேன்.

அவன் சொன்ன பதில் "வாழ்க்கையில் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. பாவங்களில் விழாமல் இருக்க முடியவில்லை. இந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுமா இல்லையா என்று திட்டமாகத் தெரியவில்லை."

பலருக்கு இவ்வகைச் சந்தேகங்கள் எழும்புவது உண்டு. இரட்சிக்கப்படுவது என்றால் என்ன என்று அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. சிலருக்கு இரட்சிப்பின் நிச்சயம் பெறக்கூடும் என்பதே தெரியவில்லை.

வேதம் இரட்சிப்பை மூன்று காலங்களில் கூறுகிறது. ஒரு வகையில் மறுபிறப்படைந்தவன் ஏற்கெனவே இரட்சிக்கப் பட்டாயிற்று. பாவத்தின் குற்றப்படுத்தலினின்றும், தண்டனையினின்றும், நாம் இரட்சிக்கப்பட்டாயிற்று. இயேசு கிறிஸ்துவை நீ ஏற்றுக் கொண்டதால் நரகாக்கினைத் தீர்ப்புக்கு நீ உட்பட்டவனல்ல. ஆனாலும் விசுவாசி ஒரு சில பாவங்களின் பிடியில் சிக்கியுள்ளவனாகவும் நாள் தோறும் அப்பிடிகளிலிருந்து விடுதலை பெற வேண்டியவனாகவும் இருக்கிறான். பாவத்தின் வலிமையிலிருந்து நாள் தோறும் அவன் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான். இறுதியாக கிறிஸ்துவை நாம் சந்திக்கும் போது பாவத்தின் முன்னிலையிலிருந்தே இரட்சிக்கப்படுவோம்.

அப்படியானால் நமது இரட்சிப்பைக் குறித்து நிச்சயமில்லை என்று போனதா? அல்ல. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்கிறார் பவுல் (எபேசியர் 2 : 8). கிறிஸ்துவை நீ நம்பி ஏற்றுக் கொண்டிருக்கிறாய் என்றால் நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய்.

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காய் மரித்தார் என்று வேத விளம்புகிறதை நீ அறிவாய் அல்லவா? கடந்த காலத்து, நிகழ்காலத் வருங்காலத்து எல்லாப் பாவங்களுக்காகவும் அவர் மரித்தார். நாம் மன திரும்பி அவரிடம் வரும்போது நம்மை அவர் ஏற்றுக் கொள்கிருர். ந முடைய குறைவுகள், பலவீனங்கள் இவற்றுடன் நாம் இருக்கும் நிலை லேயே அவர் நம்மை ஏற்றுக் கொள்கிருர். தம் பரிசுத்த ஆவியானவர் மூல அவர் நமக்குள் வருகிருர். அவருடைய பிள்ளைகளாய் இருக்கு அதிகாரத்தை நமக்குத் தருகிருர்.

இந்நிலை ஆவிக்குரிய குழந்தைகளாகப் பிறந்த நிலையே. நாம் வள வேண்டும். தவழ்ந்து, பல முறை விழுந்து, எழுந்து, நாம் அவருடன் நடக் பழக வேண்டும். விழுந்தபடியே கிடக்க வேண்டியதில்லை. நாம் பாவத் விழக்கூடும் என்று தேவன் அறிவார். ஆகவே நாம் நமது பாவங்க அறிக்கையிட்டால் மன்னிப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிருர். (1 யோவா 1 : 9). ஆகவே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின் பாவஞ் செய்துவிட்டா இரட்சிக்கப்படவில்லை என்று பொருள் அல்ல. நாம் குழந்தைகளாயிரு கிருேம், வளரவேண்டும் என்றுதான் பொருள். பாவத்தில் விழுந்து விடு தால் தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு முறிவதில்லை; தேவனேடு நம குள்ள ஐக்கியம்தான் குலைகிறது. மனந்திரும்பி நாம் வந்தவுடனே அன்பின் தந்தையாகிய அவர் நம்மை ஏற்றுக் கொள்கிருர்.

ஆனுலும் "ஒருவன் இரட்சிக்கப்பட்டதைக் குறித்து எப்படி நிச்ச மாய் இருக்கக்கூடும்?" என்று நீ கேட்கலாம்.

நம் இரட்சிப்பின் நிச்சயம் மூன்று காரியங்களைச் சார்ந்துள்ளது:

(1) பரிசுத்த ஆவியானவரின் சாட்சி: "நாம் கடவுளின் பிள்ளை ளென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியோடு கூடச் சாட்சி கொடு கிருர்" (ரோமர் 8 : 16). நாம் மனந்திரும்பும்போது நமக்குள் வசிக்கும்படி வ பரிசுத்த ஆவியானவரே நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என நமக்கு நிச்ச மளிக்கிருர். விசுவாசியின் உள்ளத்தில் அவர் சமாதானத்தையும் இளை பாறுதலையும் தந்து அவன் இயேசுவினுடையவன் என உறுதிப்படுத்துகி

(2) தேவ வசனம்: வேதவாக்கின் மூலம் பல வேளைகளில் பரிசு ஆவியானவர் சாட்சி கொடுக்கிருர். "நீங்கள் நித்திய ஜீவனை உடையவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்படி, தேவகுமாரனுடைய நாமத் விசுவாசமாய் இருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" கிருர் யோவான். (1 யோவான் 5 : 13). இயேசு சொன்னுர் "குமார விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவன்" (யோவான் 3 தேவன் இதைச் சொல்லியுள்ளார். அவர் பொய்யுரையாதவர். அவ நம்பு. வேதத்தில் அவரை விசுவாசிப்பவர்கள் எல்லோரும் இரட்சி பட்டவர்கள் என்று கூறியிருப்பதாலே நாம் இரட்சிக்கப்பட்டோம் அறிந்து கொள்கிருேம்.

(3) மாற்றப்பட்ட வாழ்க்கை: ஆண்டவரை ஏற்றுக் கொள் போது நாம் புதுப் பிறவிகளாகிருேம். நமது பழைய வாழ்வு அதன் பாவ களோடு சிலுவையில் அறையப்படுகிறது; நாம் புது வாழ்வு பெறுகிருே

புதிய அன்பு உறவுகள், புதிய விருப்புகள், புதிய வெறுப்புகள், புதிய பழக்
கங்கள் நம்மில் உருவாகுதல் இப்புதுவாழ்வின் மூலமே. கொஞ்சம் கொஞ்ச
மாக ஆனால் நிச்சயமாக நாம் இயேசுவைப் போல ஆகிறோம். இயேசு நம்
வாழ்க்கையை மாற்றியிருப்பதை சிறிதுகாலத்திற்குள் மற்றவர்களும் காணத்
தொடங்குவர். இதன்மூலம் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்ச
யத்தைப் பெறுகிறோம்.

அருமை விசுவாசியே, நீ உன் பாவங்களிலிருந்து உண்மையாய் மனக்
திரும்பி இயேசுவிடம் உன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்
கொண்டதுண்டா? உன்னுடைய இரட்சிப்புக்காய் இன்று இயேசுவின் இரத்
தத்தை மாத்திரம் நீ முழுவதும் நம்பிச் சார்ந்திருக்கிறாயா? அப்படியானால்
உனக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நீ அறிந்திருக்க வேண்டும் என்பதே
தேவனுடைய திட்டம். அடுத்த பக்கத்திலுள்ள வேத வசனங்களைப் படி.
சாத்தான் உன்னைக் குழப்ப இடம் கொடாதே. அவன் உனக்குச் சந்தேக
மூட்டினால் அவனிடம் "நான் இரட்சிக்கப்பட்டவன் என்று வேதம் கூறுகிறது"
என்று பதிலளி. (எபேசியர் 2:8).

கிறிஸ்துவின் அன்புக்குடும்பத்தில்
உன் சகோதரன்

இரட்சிப்பின் நிச்சயம்

1. நாம் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறோம் ?

a எபேசியர் 2:8-9 ______________________

b கலாத்தியர் 2:16 ______________________

c 1 பேதுரு 1:18-19 ______________________

2. நாம் எதிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம் ?

a 1 பேதுரு 1:18 ______________________

b ரோமர் 8:1-2 ______________________

c யோவான் 5:24 ______________________

d கொலோசெயர் 1:13-14 ______________________

3. நாம் இரட்சிக்கப்பட்டோம் என்று எப்படி அறியலாம் ?

a 1 யோவான் 2:3-4 ______________________

b 1 யோவான் 2:9-11; 3:17-19 ______________________

c 1 யோவான் 2:15; யாக்கோபு 4:4 ______________________

d 1 யோவான் 4:1-3 ______________________

e 1 யோவான் 5:10 ______________________

f 1 யோவான் 5:12-13 ______________________

4. நாம் இரட்சிக்கப்பட்டபின் தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் ?

a கொலோசெயர் 1:12 ______________________

b ரோமர் 6:1-2 ______________________

c ரோமர் 6:19 ______________________

d கொலோசெயர் 3:1-2 ______________________

மனப்பாட வசனம்: 1 யோவான் 5:12-13

உன் கேள்வி :

இதைக் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பு. உன் கேள்விக்கு விடையுடன் இ-
காணும், அடுத்த கடிதமும் உனக்கு அனுப்பப்படும்.

கடிதம் அனுப்புவோர் முகவரி.

கிறிஸ்துவுக்குள்ளான புது வாழ்வு

அன்பார்ந்த விசுவாசியே,

இயேசுவுக்குள் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என அறிவது எத்தனை இன்பமானது கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவனும் பரிசுத்தவான் என வேதம் போதிப்பினும், அவன் பாவத்தில் வாழக்கூடும் என்பதையும் வேதம் ஏற்கிறது. நீ உன் பழைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடம் மன்னிப்பு கேட்கவில்லையா? பின்னே ஏன் அவ்வாழ்க்கையில் இன்னும் நிலைகொண்டிருக்கவேண்டும்? பரிசுத்தவான்களாயிருக்க நாம அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் ரட்சிக்கப்படுகையில் ஏற்படும் அடிப்படை மாறுதல் யாதெனில் இயேசு நம்வாழ்க்கைக்கு ஆண்டவராக அமைகின்றார். இதுவரை நீயே உன் வாழ்க்கையை ஓட்டிவந்தாய். இப்பொழுதோ இயேசுவை உன் ஆண்டவராக ஏற்றுக்கொண்டது முதல், உனது ஒவ்வொரு ஆசை, நோக்கம் செயல்,செய்கை, பழக்கம் யாவும் அவரது ஆளுகையின்கீழ் இருக்கவேண்டும்.

முன்னாலே உலக வழக்கின்படி நடந்தோம். நம் மனசாட்சி குத்தப்படுகையில், "ஆ! இதிலே என்ன குற்றமுண்டு? இது யாவரும் செய்வது தானே" எனக் கூறுவதுண்டு. ஆனால் இப்பொழுதோ யாவரும் செய்யும் செய்கை நமது வாழ்க்கையின் வழிகாட்டியாகாது. "உங்கள் பரமபிதா பூரண சற்குணராயிருப்பது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் யாவற்றிலேயும் பூரண சற்குணராயிருங்கள்" என இயேசுவானவர் கூறியுள்ளார். தேவனுடைய தன்மையும் சுபாவமும் சுத்தமுமே நமது வாழ்க்கையின் அளவுகோலாகும். பரிசுத்த வேதாகமமே நம் வாழ்க்கையின் நடக்கை யாவற்றிற்கும் இறுதி வழித்துணையாயும் நம்மை ஆளும் கருவியாகவும் இருத்தல் வேண்டும்.

நமது இயேசுநாதர் புவியில் வாழும் பொழுது நமது பிதாவானவருக்கு விருப்பமான வாழ்க்கையே நடத்தினர். மேலும் அவர் தாம் எப்பொழுதும் தேவ சித்தத்திற்கேற்றவாறு (யாவையும் செய்ததாகவும்) செயலாற்றியதாகவும் விளம்பியுள்ளார். எனவே வேதாகம குறிக்கோளுக்கேற்றவாறு நாம் வாழ்வோமாயின் கிறிஸ்துவைப்போன்ற வாழ்க்கையை வாழ்பவராவோம்.

இவ்வாறு கிறிஸ்துவைப் போன்று வாழ விரும்புவோமாயின் நம் வாழ்க்கை முழுமையும் கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்தல் தேவை.

முதற்கண் நம் ஒழுக்க நெறி மாற்றப்பட்டதாக அமையும். இயேசுவைப்போன்று பூரண நேர்மையுள்ளவர்களாகவும், தன்னலமற்றவர்களாகவும் பிறரோடு சம்பந்தப்படும் யாவிலும், செய்கையில் மட்டுமன்றி, நோக்கத்திலும் நம் குறிக்கோளிலும், எண்ணங்களிலும், வார்த்தைகளிலும் அன்புடையவர்களாகவுமிருத்தல் வேண்டும். நமது சொற்கள் கிருபை பொருந்திய வார்த்தைகளாகவும், பிறரை ஊன்ற கட்ட வல்லதாகவும் அமைய வேண்டும். இந்த பிரசங்கத்தை சற்று தியானித்து உங்கள் முழு வாழ்க்கையையும் அதற்கிசைவாக அமைக்க உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக நம் உணர்ச்சிவசப்பட்ட வாழ்க்கை மாறவேண்டு ஒருவர் முற்கோபியாகவும், மற்றவர் கொடூர நெஞ்சராகவும், மூன்றுமவர் தொ டாற்சிணுங்கியாகவும் எதையும் மனதிற்குப்பாரமாக எடுப்பவராகவும் கா படலாம். இத்தகைய உணர்ச்சி தன்மைகளின் காரணமாக நாம் பல மு களில் நாமே நமக்கும் பிறருக்கும் பிரச்சனைகளாகவே காணப்படுகிறோம். போது நீ உன் பலவீனங்களை அறிந்தும், அறியாமலும் இருக்கலாம். ஆ தற்போது நீபரிசோதனையின் மூலமாயும், நண்பர்கள் மூலமாயும், நீ அப் வீனங்களை உணர்ந்து கொள்ளக்கூடும்.

உன் குறைகளைத் தேவனிடம் கொண்டுவா. நீ எத்துணை அன்ப வனாகவும், கடினமானவனாகவும், தன்னலமுள்ளவனாகவும், பிறரை சந்தே பவனாகவும், பிறன்மீது குற்றஞ்சாட்டி உன் சுயநீதிக்காக போராடுகிற வும் இருந்தாயென ஒத்துக்கொண்டு இவைகளில் வெற்றி பெற ஜெபி. நீ அ சமூகத்தில் காத்திருக்கையில் அவர் உனக்கு அவ்வெற்றி வாழ்க்கையை ஈவ இயேசுவின் அழகு உன் மூலமாய் ஒளிரும் வகையில் அவர் உன்னை மாற் யமைப்பார். இவ்வழி கடினமாகத் தோன்றலாம். சிலரிடம் மன்னிப் கேட்கவும், நீ இழைத்த தீங்கினை சரிப்படுத்தவும் அவர் உன்னைக் கேட் லாம். உனது பழைய சுபாவம் இதற்கிணங்க சில வேளைகளில் தயங்கு சாத்தானும் உன்னைத் தளர்ந்துபோகப் பண்ணுவான். எனினும் நீ உண் யில் இயேசுவைப்போலாக விரும்பினால் தேவன் உனக்குத் துணைபுரிவார்.

மூன்றாவதாக மாற்றப்பட்ட அன்பு. கிறிஸ்துவில்லா வாழ்க்கையில் நா உலகத்தால் கவரப்பட்டு இழுப்புண்டோம். அதன் இன்பங்கள், கவர்ச்சிகள் கீர்த்தி, பொருளுடைமை இவைகளே வாழ்க்கையின் குறிக்கோள் என எண் அவற்றிற்காகவே வாழ்ந்து வந்தோம். ஆனால் இப்பொழுதோ நாம் புதி இராஜ்யத்தின் பிரஜைகளாக உள்ளோம். கிறிஸ்துவின் சிலுவையின் மூல நாம் இவ்வுலக வாழ்க்கைக்கு மாண்டுள்ளோம். ''முதலாவதாக தேவனுடை இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவை களெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்.''

தேவனுடைய இராஜ்யமும், அதன் பேரிலுள்ள ஆர்வமும், நம் சு விருப்பத்துக்கு மேலாக இருத்தல் வேண்டும். தமது நாமத்தினிமித்தம் நா நம் ஜீவனை இழக்கமுன் வருவோமேயாகில் அதனை நாம் கண்டடைவோ என இயேசு குறிப்பிட்டுள்ளார். இயேசுவுக்காக நாம் எதையும் தியாகமா அர்ப்பணிப்போமேயானால் அதனை நூறத்தனையாகப் பெற்றுக்கொள்வதோ இவ்வாழ்விற்குப்பின் நித்திய ஜீவனையும் அடைவோம்.

நண்பனே, பரிசுத்த ஆவியாகிய தேவனானவர் உன்னை மகி பொருந்திய இயேசுவின் சாயலாக மாற்ற வல்லமையுடையவர். உனது வேத வாசிப்பு மூலமாகவும், நண்பர்கள், சூழ்நிலை முதலியவை மூலமாக அவர் உன்னை மாற்றும்படி நீ கேட்டு அவ்வாறு செய்ய அனுமதிப்பாயா இம் மாறுதல் உபத்திரவம் மூலமாக ஏற்படலாம். ஆனால் பெரிய குய உன்னை உருவாக்க முயலும்போது அவர் தம் சித்தத்தை உன் வாழ்க்கை நிறைவேற்ற இடம் கொடுப்பாயாக.

விசுவாசத்தில் உடன் சகோதர

கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வு

1. ஒரு கிறிஸ்தவன் வாழக்கூடிய இரு முறைகள் எவை?

a. கலாத்தியர். 5 : 16, 17 (i)__________

b. எபேசியர். 4 : 22, 23 (ii)__________

2. பழைய வாழ்வின் பயன்கள் யாவை?

a. கலாத்தியர். 2 : 18 __________

b. பிலிப்பியர் 3 : 18, 19. __________

c. 1 கொரிந்தியர் 3, 13—15__________

d. எபிரேயர் 10 : 26 – 31__________

e. ரோமர் 6 : 16__________

3. புதிய வாழ்வு நாம் வாழவேண்டியது ஏன்?

a. கொலோசேயர் 3 : 7, 10__________

d. எபேசியர் 5 : 7, 8__________

c. யோவான் 14 : 23__________

d. யோவான் 15 : 7 __________

e. வெளிப்படுத்தல் 7 : 14 – 17 __________

4. புதிய வாழ்க்கையை நாம் எவ்விதம் வாழலாம்?

a. கலாத்தியர் 5 : 17__________

b. யோவான் 15 : 3, 4__________

c. ரோமர் 8 : 13__________

d. ரோமர் 6 : 12, 13__________

மனப்பாட வசனம் எபேசியர் 4 : 22 – 24

தியான வேளை

அன்பார்ந்த நண்பனே,

நீ கிருஸ்துவை ஏற்றுக் கொண்டதன் பயனாக இப்பொழுது தேவனோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளாய் என எடுத்துரைப்பது நமது சிலாக்கியமாகும். அவர் உனது மீட்பராகவும், மேய்ப்பராகவும், உன் தந்தையாகவும் நண்பராகவும் இருக்கிறார்.

உன் மீட்பராக அவர் உன் பாவங்களினால் உண்டான தண்டனையினின்று உன்னை மீட்டுள்ளார். இனி இன்றும் உன் வாழ்க்கையில் காணப்படும் பாவத்தின் கூரினின்றும் உன்னை மீட்டுக்கொள்ள விரும்புகிறார். தற்போது நீ அதனை அறியாதிருக்கலாம். அல்லது நீ அறிந்தும் அப்பாவத்தின் அகோரத்தை இன்னும் உணராதிருக்கலாம். ஆனால் நீ தேவசமூகத்தில் தரித்திருந்து அவர் சொல்வதைக் கவனித்து, தினந்தோறும் அவரது வல்லமையை நாடுவாயானால் தேவன் இப்பாவங்களை உணர்த்திக்காட்டி அவைகளின்மீது வெற்றியையும் தருவார்.

இனி கிறிஸ்தவனாகிய நீ தினம் சந்திக்கும் சூழ்நிலையில் எத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டுமென தீர்மானிக்க வேண்டியதாயிருக்கும். உன் மேய்ப்பராகிய தேவன் நீதியின்பாதையில் உன்னை நடத்த மனதுள்ளவராயிருக்கிறார். தினந்தோறும் அவரது வழி நடத்துதலுக்காக நீ அவரை நாடிச்சென்றால் மட்டுமே அவர் உன்னை வழி நடத்த இயலும்.

இயேசு கிறிஸ்துவின் சாயலாக நம்மை மாற்றுவதே தேவனாகிய நமது தந்தையின் தீரா வாஞ்சையாக அமைந்துள்ளது. நமது பூரண எடுத்துக்காட்டாகிய, தேவனுடைய ஒப்பற்ற குமாரனாகிய, இயேசுவின் சாயலில் நம்மை மாற்றி அமைப்பதே தேவனாகிய நமது தந்தையின் தீரா வாஞ்சையாக அமைந்துள்ளது. நாடோறும் கிறிஸ்துவின் மகிமையான சாயலில் நம்மை மாற்றவே நம் தந்தை விரும்புகிறார். நாம் தேவனோடு தனித்திருக்க ரகசியமான நேரம் செலவிடுவதாலேயே இவ்வண்ணம் தேவ சாயலாக மாற்றப்படுகிறோம் என் பதைப் பக்தர்களின் அனுபோகங்கள் மூலம் காண்கிறோம்.

நமது நண்பராக, தேவன் நமது சகவாசத்தை விரும்புகிறார் என்பது உன்னை அதிசயிக்க வைக்கலாம். எனினும் வேதம் அவ்வாறே போதிக்கிறது. சிறப்பாக தேவன் நம்மை சிருஷ்டித்த முக்கிய நோக்கம் இதுவேயாகும். ஆதி: 3-ம் வசனம் மூலம் தேவன் ஆதாம் ஏவாளோடு ஐக்கியப்பட்டிருக்கவே அவர் களை நாடோறும் கண்டு சந்தித்தார் என அறிகிறோம். ஆனால் பாவத்தின் பயனாக இத்தொடர்பு கெட்டழிந்தது. பின்னால் தொடரும் சரித்திரங்களில் தேவன் இஸ்ரவேலைத் தமக்காக பிரித்தெடுக்கையில் தாம் தம் மக்களோடு தினம் சந்தித்து உறவாடுவதை விரும்புவதாகக் கூறியுள்ளார்.

(யாத் : 29 . 42)

தேவன் தன்னோடு ஐக்கியம் கொள்ள விரும்புவதாக தாவீது அறி படியால் சங். 27 : 8ல் பின்வருமாறு கூறுகிறார்

"என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று"

நண்பனே, நீ இப்பொழுது தேவனுடைய சிநேகிதனாக மாறியபடி நீயும் அவருடைய வாஞ்சையை நிறைவேற்றுவதற்காக தினந்தோறும் ரைச் சந்திப்பாய் என நம்புகிறேன். இல்லையோ? இவ்வாறு தேவனே அவரது பிள்ளைகள் உறவாடுவது நமது நல்வாழ்வுக்கு அவசியமாயிரு தோடு தேவனை மகிழ்விப்பதாகவும் உள்ளது.

அநேக விசுவாசிகள் தேவனோடு ஜெபத்தின் மூலம் பேசவும், வேதத் வாசித்து தியானிப்பதன் மூலம் அவரது சத்தத்திற்குச் செவி கொடுக்க காலையில் ஒருநேரத்தை ஒதுக்கி வைக்கிறார்கள். இச்சமயத்தைததான் அ கள் "அமைதி நேரம்" (அல்லது தனி வாசிப்பு நேரம்) எனக் கூறுகிறார்க இவ்வமைதி நேரத்தில் ஜெபமும், வேத வாசிப்பும் தான் தேவனோடு உறவா ஏற்ற ஏதுக்களாகும். ஆயினும் சிலர் தியானப் பாட்டுக்களை அந்நேரத் பாடவும் விரும்புகிறார்கள். வேறு சிலர் வேதம் வாசிப்பதோடு "My Utmo for His Highest" அல்லது பாலைவன நீரோடைகள் போன்ற தியான நூல்க யும் படிக்கின்றனர். இந்நூல்களில் ஒரு வருடத்தின் ஒவ்வொரு நாளுக் ஒரு பக்கம் அடங்கிய ஒரு அத்தியாயம் நியமிக்கப்பட்டுள்ளது. நானும் இப்புத்தகங்களின் பயனைக் கண்டுள்ளேன். ஆயினும் இவைகளை வே புத்தகத்திற்குப் பதிலாக வாசிக்கலாகாது.

புகழ்பெற்ற இந்தியக் கிறிஸ்தவ புலவர் ஒருவரான குமாரி எ லக்ஷ்மி கோரே என்பவர் தனது அமைதி நேரத்தின் அனுபவங்களை ப வரும் அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

"அவரது ரகசிய சமூகத்தில் மறைந்திருப்பது என் ஆன்மாவு
எத்தனை இன்ப
ஆ... ... இயேசுவுக்கருகில் அமர்ந்து நான் கற்கும் பாடங்கள் எத்
அருமையான
உலக கவலைகள் ஒருபோதும் என்னை வருத்த முடியா; சோதனை
என்னை வீழ்த்த இய
ஏனெனில் சாத்தான் என்னைச் சோதிக்கையில் இவவிரகசிய
திற்கு யான் செல்கின்றே
என் ஆன்மாவிடாய்த்து தவனமயாயிருக்கையில் அவரது செட
களின் மறைவி
குளிர்மையும், இன்பமுமான அடைக்கலமும், புதிதும் பளிங்குபோன்
மான ஊற்று
நான் என் இரட்சகரோடு இவ்வின்ப ஐக்கியம் கொள்ளுகை
அவர் என்னருகில் அமர்ந்து
இவ்வாறு அவரை சந்திக்கையில், நான் எத்துணை முயற்சித்தும் அ
கூறுபவைகளை எடுத்துரைக்க இயல

என் சந்தேகங்களையும் துயரங்களையும், பயங்களையும் அவரிடம் கூறு
கின்றேன். இது ஒன்றையே அறிவேன்.

ஆ... எத்துணை பொறுமையாய் அவர் செவிசாய்த்து எனது தளர்ந்த
ஆன்மாவை ஊக்குவிக்கிறார்.

ஒருபோது என்னைக் கண்டியார் என எண்ணுகின்றாயோ ?

அவர்காணும் பாவங்களை ஒருபோதும் எடுத்துரையாராயின் எவ்வளவு
போலி நண்பராயிருப்பார்!

தேவனுடைய ரகசிய இன்பங்களை நீ அறிய விரும்புகின்றாயோ?
அவரது நிழலின் அடியில் ஒளிந்துகொள். இதுவே உனது பிரதி
பலனாகும்.

நீ இவ்வமைதியும், இன்பமுமான சந்திப்பின் தானத்தை விட்டெழும்
போதெல்லாம்

உன் எஜமானின் சாயலை உன் முகத்தில் தரித்திருப்பது திண்ணம்! ”

நீயும் இவ்வமைதியான தியானத்திற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிவைக்க தீர்மானிக்கக்கூடாதா ? எவ்வளவு நேரம் என்பாயானால் நான் கண்டபடி, குறைந்தது ஓர் அரைமணி நேரமாவது கருத்தோடு கூடிய தியானத்திற்கு தேவைப்படும்.

வேதத்தை தியானம் செய்ய ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்ற விரும்புகிறேன். வேதாகமம் முழுமையும் மூன்று ஆண்டுகளில் படிப்பதற் கேதுவாக "வேத வசனங்களை ஆராய்ந்து பார்" என்ற குறிப்பு நூலை சிலர் பயனுள்ளதாகக் காணகின்றனர். இந்நூல் ஆங்கிலம், குஜராத், ஹிந்தி முதலிய மொழிகளில் கிடைக்கும். தேவையானால் UESI, Box 1030, Madras-10 என்ற விலாசத்திற்கு எழுதி கேட்கலாம்.

தேவனோடு உறவாடும் சமயங்களில் அவர் உன்னை ஏராளமான ஆசீர் வாதத்தால் நிரப்புவாராக.

இவண்
உன் சகோதரனாகிய

தியான நேரம்

1. தியான நேரம் நமக்கிருப்பதன் அவசியம் யாது ?

a சங். 27 : 8 ____________________

b ஏசாயா 40 : 30, 31 ____________________

c ஏசா 50 : 4 ____________________

d 1 பேதுரு 2:2 ____________________

e சங்கீதம் 1 : 2, 3 ____________________

2. தியான நேரம் எப்பொழுது இருக்க வேண்டும் ?

a ஏசாயா 50:4- ____________________

b மாற்கு 1 : 35- ____________________

3. எத்தனை முறை தியான நேரம் இருக்க வேண்டும் ?

a ஏசா 50 : 4- ____________________

b யாத். 29 : 42 ____________________

4. அமைதியான நேரத்திற்காக எங்கு செல்லவேண்டும் ?

a மாற்கு 1 : 35 - ____________________

b மத்தேயு 6 : 6 - ____________________

5. அமைதி நேரத்தில் நாம் செய்யவேண்டியது யாது ?

a கொலோசெயர் 1:2- ____________________

b ஏசாயா 50:4; அப்போஸ்தலர் 17:11 ____________________

c எபேசியர் 6 : 18 ____________________

d எபேசியர் 5 : 19 ____________________

மனப்பாட வசனம்: ஏசாயா 50 : 4

“வேதம்” - வளர்ச்சிக்கு ஓர் ஞானப்பால்

அருமை நண்பா,

நீர் இந்தக் கடிதத்தைப் படிப்பதே உம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி பெறவேண்டும் என்ற உமது விருப்பத்தைக் காட்டுகிறது. இதை குறித்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. கிறிஸ்துவின் மக்கள் கிறிஸ்துவைப் போல் வளர வேண்டும் என்பது நமது பிதாவின் விருப்பங்களில் ஒன்றாகும்

கடவுள் நம்மிடம் வேதத்தைக் கொடுத்துள்ளது, அதை நாம் படித்து, முப்படிந்து வளர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக வேண்டும் என்பதற்காகவே தற்கால மககளில் சிலர் வேதம் கடவுளின் உண்மையான வார்த்தை தானோ அல்லவோ என்று வியக்கின்றனர். ஆனால் இக்கேள்வி நம்மை குழம்ப வைக்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் பவுல் சொல்கிறார், “வேதம் ஆவியானவரால் [கடவுளால்] ஏவப்பட்டு [ஊக்குவிக்கப்பட்டு] எழுதப்பட்டது” என்று [2 தீமோத்தேயு 3:16] இதையே இயேசுவும், வேதம் முற்றிலும் உண்மை, “அதை ஒருக்காலும் தகர்க்க முடியாது” என்று யோவான் 10:35 ல் கூறுகிறார்.

கொலோசெயர் 1:9—10 ல் பவுல். கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய அறிவிலும், ஆவிக்குரிய குணத்திலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதே தனது ஆழ்ந்த விருப்பம் என்று கூறியுள்ளார். இவ்விரண்டு வழிகளிலும் வளர்ச்சி பெற வேதம் உனக்கு துணைசெய்யும்.

பல காரணங்களுக்காக நாம் ஆவிக்குரிய அறிவு அல்லது கடவுள் பற்றிய அறிவில் வளர வேண்டியவர்கள். முதலாவதாக, கடவுளையும், கடவுளின் பெருந்தன்மையையுப் அவரின் தூய்மையையும் அறிந்திருந்தால் தான் நம்மால் அவரைச் சரியாக வழிபட முடியும். இரண்டாவதாக, நாம் கடவுள் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்றறிந்துள்ள அளவின் படியே அவரில் நம்பிக்கை வைகக முடியும். மூன்றாவதாக, நாம் கடவுளோடு சரியாக இருக்கவும் அறிவில் இன்னும் வளர்ச்சிபெற வேண்டியவர்களாயுள்ளோம். இல்லாவிடில் மக்கள் நம்மைத் தவறான போதனைகளால் ஏமாற்றக் கூடும்.

ஆவிக்குரிய வளர்ச்சி பெறுதல் எவ்வாறு?
தேவனின் வார்த்தையை ஆகாரமாக உட்கொள்ளுவதாலேயே.

(எபிரேயர் 5 : 12—14)

கிறிஸ்தவ குணாதிசயங்களில் வளர வேதாகமப்படிப்பு தேவை. வேதம் எழுதப்பட்டதின் நோக்கம் நாம் எது நன்மை எது தீமை என அறிந்து நன்மையைப் பற்றி அதில் நிலைக்கவே (2 தீமோ 3 : 16). வேதம் நம் உண்மை உருவைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி (யாக்கோபு 1:26) என்றது வேதம் நம் பாவம் கழுவும் தண்ணீர் போன்றதுமாம் (எபே 5 : 26)

வேதம் மற்றும் சில பொருட்களைப் போன்றுமுள்ளது. பேதுரு ந
வளர அதனைத் தூயபாலைப் போல் நாடவேண்டும் எனக் கூறுகிறார். பவு
வேதம் சாத்தானுடன் போர்புரிய உதவும் நம் பட்டயம் என விளம்புகிற
கிறிஸ்து சாத்தானுடன் போர் புரிகையில் பயன்படுத்திய கருவி எது தெ
யுமா? வேதமே. சங்கீதக்காரன் ''வேதம் என் கால்களுக்குத் தீபம் என்று
பாதைக்கு ஒளி என்றும்'' கூறுகிறார்.

ஆகவே வேதம் உன் கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை
மேற்கூறியனவைஉனக்கு உணர்த்தும் என நம்புகிறேன். வேதமே கிறிஸ்த
னின் நம்பிக்கைக்கும் நடத்தைக்கும் இறுதி ஆதாரம். அவ்வேதமே நாம் எதை
நம்பவேண்டும் எப்படி வாழவேண்டும் எனக் கூறவேண்டும்.

ஆனால் நீ. ''எப்படி நான் வேதத்தைப் படிப்பது? அதிலுள்ள பல கா
யங்கள் எனக்கு விளங்கவில்லையே'' எனக்கேட்கலாம். வேதத்தில் பல கா
யங்கள் புரிந்து கொள்ள கடினமானவை என்பது உண்மையே. ஆன
அது இளைஞர், முதியர் ஆகிய இருவருக்குமாகவே எழுதப்பட்டது என்பதை
நினைவுபடுத்து. முதலில் நாம் இளைஞராக இருக்கையில் கொஞ்சமே விள
கும். ஆனால் படிக்கப்படிக்கக் கடினமான காரியங்களும் விளங்கத் தொட
கும். நீ எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் விளங்க முடியாவிட்டாலும் பரவ
யில்லை. முக்கியமானது என்னவென்றால் நீ விளங்கினதைப் பின்பற்றவேண
டும் என்பது தான். நீ படித்து — கீழ்ப்படிந்து செல்லுங்கால் சிக்கல்க
தானே தீரும்.

வேதப்படிப்புக்கு எளிமை முறை ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்
படிப்பதே. முழுவதும் படி, படிக்கும்போதே முக்கிய வசனங்களை அடி
கோடிடு. புத்தகத்தின் மையக்கருத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செ
பின் மெதுவாக வசனம் வசனமாகத் தியானித்துத் திரும்பப்படி. அதன் பொ
ருளை முழுப்புத்தக கருத்தோடு ஒப்பிட்டும், அந்தப் பகுதியின் படியும் விள
கிப் பயன்படுத்தல் வேண்டும்.

இரட்சிப்பு, உலகம், பாவம், சிலுவை, தூய்மை போன்ற தலைப்புக
லும் வேதத்தைப் படிக்கலாம். அல்லது, தாவீது, மோசே, ரூத், யோசே
போன்றோர் வாழ்க்கையைப் படித்து அவர் தம் வாழ்வு உனக்கு எவ்வா
பயன்படுகிறது என்றறியலாம்.

வேதத்திலுள்ள விலையுயர்ந்த காரியங்களில் ஒன்று தேவன் தம் ம
ளுக்கு அருளிய எண்ணிமுடியாத வாக்குத்தத்தங்களே, ஆவியானவர் அவ
றில் பலவற்றை உனக்குச் சொந்தமாக்குவார் ஜெபத்தோடு அவற்ற
தியானி, அவ்வொளியில் நடக்கத் தொடங்கும்போது நாம் ஏராளமான
சாகம், அமைதி, நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவை பெறுகிறோம்.

அருமை சகோதரனே, என் இதயத்தின் ஆழஜெபம் நீயும் வேத
படித்து, கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் சிந்தையில் முழுமையடைய வேண
மென்பதே.

கிருஸ்துவில் சகோதரன்

வேதம் : வளர்ச்சிக்கு ஞானப்பால்

1. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று ஏன் சொல்லப்படுகின்றது?

2 தீமோத்தேயு 3:16; 2 பேதுரு 2:21 ______

2. வேதாகமம் உண்மையானது என்று நாம் ஏன் விசுவாசிக்கிறோம்?

மத்தேயு 5:18; யோவான் 10:35 ______

3. வேதாகமம் நமக்கு என்ன செய்கிறது?

a) 2 தீமோத்தேயு 3:15 ______

b) 2 தீமோத்தேயு 3 : 16 ______

c) 2 தீமோத்தேயு 3 : 17 ______

d) சங்கீதம் 119:9,11 ______

e) சங்கீதம் 119 : 105 ______

4. வேதாகமத்தை வைத்து நாம் என்ன செய்ய வேண்டும்?

a) யோவான் 5 : 39 a ______

b) சங்கீதம் 1:2 ______

c) கொலோசேயர் 3 : 16 ______

d) யாக்கோபு 1 : 22 ______

e) மத்தேயு 28 : 20 ______

மனப்பாட வசனம் : எஸ்றா 7 : 10

உன் கேள்வி :

இதைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பு. உன் கேள்விக்கு விடையுடன் இத்தாளும், அடுத்த கடிதமும் உனக்கு அனுப்பப்படும்.

கடிதம் அனுப்புவோர் முகவரி :

ஜெபம் : வல்லமைக்கு வழி

அருமை நண்பனே,

சிறுவன் ஒருவன் ஒரு பெரிய கல்லைத் தூக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் தந்தை அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்தார். சிறுவன் தன் முயற்சியில் வெற்றிபெறாது போனதைக்கண்ட தந்தை "மகனே, உனக்கு கிடைக்சக்கூடிய ஆற்றலையெல்லாம் நீ பயன்படுத்தி விட்டாயா? என்று கேட்டார். அவன் "ஆம்" என்றான். அதைக்கேட்ட தந்தை "இல்லை, நான் இங்கே தானே நின்று கொண்டிருக்கிறேன், உதவும்படி என்னை நீ கேட்கவில்லையே" என்றார். நாமும் எத்தனையோ வேளைகளில் இச் சிறுவனைப் போலவே அறிவிலிகளாக இருக்கிறோமல்லவா? பரம தகப்பன் தம் எல்லையில்லா ஆற்றலுடன் நமக்கு உதவக் காத்திருக்கும்போது, நாம் சொந்த ஆற்றலினால் காரியங்களைச் சாதிக்க முயன்று தோல்வியடைகிறோம்.

வேதம் கூறும் இவ்வசனத்தை நீ அறிவாயா? "தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது" இவ்வசனம் விசுவாசிகளுக்கு ஒரு சவாலாகவும், ஊக்கப்படுத்தலாகவும், வாக்குறுதியாகவும் உள்ளது தேவன் தமது அளவற்ற ஆற்றலினால் உதவக்கூடிய ஆட்களைத் தேடுகிறார் என இவ்வசனம் அறிவிக்கிறது. உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சிக்கல்கள் உனக்குண்டா? இப்போது இல்லாவிடினும் நீ தொடர்ந்து விசுவாச வாழ்க்கையில் செல்லும்போது அத்தகைய சூழ்நிலைகள் பல உனக்கு நேரிடுவதும் திண்ணம்.

ஆனாலும் விசுவாசி அஞ்சவேண்டியதில்லை தேவனுடைய அளவற்ற ஆற்றல் அவனுக்கு உறுதுணையாய் இருக்கிறது தேவனுடைய ஆற்றலை நாம் எவ்வாறு பெற்று பயனடைய முடியும்? விசுவாச ஜெபத்தின் மூலமே தான் அது முடியும்.

மேற்கூறிய வசனத்தில் (11 நாளாகமம் 16 : 9) தேவன் உனக்கு உதவ நீ நிறைவேற்ற வேண்டிய நிபந்தனை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. நீ உத்தம இருதயமுடையவனாயிருக்க வேண்டும் என்பதே அது. உத்தம இருதயத்தோடு ஜெபித்தல் என்றால் என்ன? மூன்று காரியங்கள் இதில் அடங்கியுள்ளன.

(1) கழுவப்பட்ட இருதயமும் தூய நோக்கங்களும்; கிருஸ்துவின் இரத்தத்தால் தூய்மையாக்கப்பட்ட இதயத்துடன் நாம் ஜெபிக்க வர வேண்டும். நம் நோக்கங்கள் தூய்மையாக இருத்தல் வேண்டும். நம் சொந்த விருப்பங்களை நிறைவேற்றும்படியாக வேண்டுதல் கூடாது. இயேசுவின் பெயரில், அதாவது அவர் மகிமைக்காகவும், அவர் விருப்பப்படியும், ஜெபிக்க வேண்டும்.

(2) சீரான உறவுகள் :

வேதம் இக்காரியத்தை மிகவும் வலியுறுத்துகின்றது தேவனிடம் நாம் வருமுன் மற்றவர்களுடன் நமது ஐக்கியம் குலைந்திருக்குமாயின் அவற்றைச் சரிப்படுத்தல் வேண்டும். நாம் மற்றவர்கள் மேல் மன்னிக்காத கசப்பான மனதை கொண்டிருந்தால் தேவன் நமக்கு நம் தவறுகளை மன்னிக்கமாட்டார், நமக்குச் செவிகொடுக்கவும் மாட்டார்.

6. தேவனமேல முழு நம்பிக்கை :

உத்தம இருதயம் என்பது தேவனையே முழுவதும் நம்பிச்சார்ந்த இ மாகும். 2 நாளாகமம் 16ம் அதிகாரத்தில் ஆசா என்னும் அரசனிடம் இரு குறைபாடு அவன் தேவனைக்காட்டிலும் மனிதர் மேல் நம்பிக்கை வைத் நமது தேவைகளுக்கு தேவனையே சார்ந்திருக்கிறோம் என அறிவிப் உண்மை ஜெபம். அப்படிப்பட்ட மனப்பான்மை அவரை மகிமைப்படு கிறது. விசுவாசத்தோடு ஜெபித்தால் அவர் நம் ஜெபத்தைக் கேட் "அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்திரவு கொடுப் அவர்கள் பேசும்போதே கேட்பேன்" என்று அவர் வாக்குறுதி கொடுக் (ஏசாயா 65 :

ஆகவே நண்பனே, உன் விசுவாச வாழ்வின் தொடக்கத்திலே ஜெபிக்கும் பழக்கத்தை நீ நன்கு கடைப்பிடிக்க உன்னை ஊக்குவிக்க வி கிறேன். இதுவே தேவனை முற்றிலும் சார்ந்த வாழ்வாகும். இப்படித் அவரது பேராற்றலை நீ உன் நடைமுறை வாழ்வில் பெற்றுப் பயனடை கூடும்.

ஜெபிக்காததினாலேயே பல கிறிஸ்தவர்கள் இன்று வலிமையற்றும் னற்றும் வாழ்கிறார்கள். இயேசு சொன்ன வசனம் நம்மைக் கண்டி உணர்த்தட்டும்: "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தில் ஒன்றும் கே தில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாகும்படி பெ றுக்கொள்வீர்கள்." (யோவான் 16 : 24)

ஜெபத்திற்காக ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கு. ஜெபநேரம் தி நேரத்துடன் சேர்ந்தோ, தனியாகவோ இருக்கலாம். உன் மனதை அ யாக்க முதல் சில வினாடிகள் எடுத்துக்கொள். பின் தேவனைத்துதிக்க கொ நேரம் செலவிடு — அவருடைய தன்மைகளுக்காய் அவரை வணங்கு. அ செய்த நன்மைகளுக்காய் அவருக்கு நன்றிகூறு. பின்னர் உன் விண்ணப் களை அவரிடம் வை. உன் நண்பர்களுக்காகவும், தேவ ஊழியர்களுக்கா அதிக இடுக்கண்களிலிருப்பவர்களுக்காகவும் வேண்டுதல் செய். ஜெபிக் பொழுதே உன் வேண்டுதல்களை அவர் கேட்பார் என விசுவாசி. "கே கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று அவர் சொல்லி கிறார் அல்லவா ?

பரிசுத்த ஆவியானவர் உன் உள்ளத்தில் ஒரு பாரத்தைக் கொடு போது, பதில் பெறும் வரை அதற்காக ஜெபி இடையில் கைவிடாதே. வேளை பதில் பெற பல நாட்களோ, மாதங்களோ, ஆண்டுகளோ தொடர் ஜெபிக்க வேண்டியதிருக்கும்.

நண்பனே, ஜெபத்தைக் குறித்து உன் மனதில் எழக்கூடிய பல வி களுக்கு இக்கடிதத்தில் நான் விளக்கமாய் பதில் தரவில்லை என்று அறி இத்துடன் இணைத்துள்ள வேதபாடத்தைக் கருத்தாய் படிக்கக் கேட்கிறே உன் கேள்விகள் பலவற்றுக்கு அதிலே நீ பதில் காணக்கூடும்.

தானியேல் ஜெபத்தில் சிறந்தவன். ஆகவே அவன் 'தேவனு பிரியமானவன்'. நீயும் தேவனுக்குப் பிரியமானவனாக ஆக விரும்புவா

கிறிஸ்துவின் அன்பு இணை
உன் சகோதரன்

ஜெபம் : வல்லமைக்கு வழி

1. தேவன் நமக்குச் செவிகொடுப்பார் என்று ஏன் நாம் விசுவாசிக்கிறோம்?

a) மத்தேயு 7 : 7 ____________________

b) மத்தேயு 7 : 11 ____________________

2. தேவன் நம் ஜெபத்திற்கு பதிலளிக்க நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் யாவை ?

a) மாற்கு 11 : 24 ____________________

b) மாற்கு 11 : 25 ____________________

c) யாக்கோபு 4 : 3 ____________________

d) யோவான் 9 : 31 ____________________

e) யோவான் 15 : 7 ____________________

f) 1 யோவான் 5 : 14 ____________________

3. எப்பொழுது எத்தனை முறை நாம் ஜெபிக்க வேண்டும் ?

a) மாற்கு 1 : 35 ____________________

b) தானியேல் 6 : 10 ____________________

c) 1 தெசலோனிக்கெயர் 5 : 17 ____________________

4. எவற்றுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் ?

a) லூக்கா 11 : 13 ____________________

b) மத்தேயு 26 : 41 ____________________

c) யாக்கோபு 1 : 5 ____________________

d) யாக்கோபு 5 : 13, 14 ____________________

e) 1 தீமோத்தேயு 2 : 1-2 ____________________

f) எபேசியர் 6 : 18 ____________________

g) எபேசியர் 6 : 19 ____________________

மனப்பாட வசனம் : யோவான் 16 : 23 24

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை: விசுவாசம்

அருமை விசுவாசியே,

முந்தின கடிதத்தில் ஜெபத்தைப் பற்றி எழுதினது உனக்கு நினைவிருக்கலாம். விசுவாச வாழ்வு இல்லாமல் பலனுள்ள ஜெபம் செய்தல் முடியாது. எனவே இக்கடிதத்தில் 'விசுவாசம்' என்பதைப் பற்றி நீ மேலும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு விசுவாசி மறுபடி பிறந்தது விசுவாசத்தால்; அவன் வாழ்வது விசுவாசத்தால். முதல் நிலையில் விசுவாசம் **'இரட்சிக்கும் விசுவாசம்'** எனலாம். நம் பாவங்கள் ஏசுவின்மேல் சுமத்தப்பட்டதைக் காண்பதுவும், அவரது தியாகபலியின் புண்ணியத்தை நமக்குச் சொந்தமாக்கி கொள்வதுமே இவ்விசுவாசம். இரண்டாம் நிலையில் விசுவாசம் **'காக்கும் விசுவாசம்'** எனலாம் வாழ்க்கை முழுவதும் அவர்மேல் சார்ந்து இருப்பது இவ்விசுவாசம்.

'விசுவாசத்தில் நீதிமான் பிழைப்பான்' என்பதே வேதத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மையக் கருத்தாகும். ஒவ்வொரு மணித்துளியும் நாம் அவரோடு இணைந்து வாழவேண்டும். இது அவருடன் 'விசுவாச இணைப்புக் கொள்வதால் மட்டுமே ஆகும்.

விசுவாச வாழ்க்கையில் பின்வரும் மூன்று காரியங்கள் அடங்கியுள்ளன.

1) கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்:

மெய்யான திராட்சச் செடியான அவரில் காட்டுக்கொடிகளாய் இருந்த நாம் ஒட்டவைக்கப்பட்டுள்ளோம். இப்போது நாம் அவரோடு இணைந்துள்ளோம். அவர் நமக்குள்ளும், நம்மோடும் இருக்கிறார். அவர் நம்மைவிட்டு ஒருபோதும் விலகுவதில்லை என வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இப்படி நாம் அவரோடு இணைக்கப்பட்டிருப்பதை அறிதல் உள்ள அமைதிக்கு நம்மை நடத்துகிறது. அவரோடு இருத்தலில் மனநிறைவும், மகிழ்வும் நாம் பெறுகிறோம். கொடிகளைப்போல ஒவ்வொரு மணித்துளியும் அவரிடமிருந்து சத்து பெற்றுக் கனி கொடுக்கிறோம்.

2) கிறிஸ்துவுக்காய் அரிய செயல்கள் புரிதல்:

நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதையும், விசுவாசிக்கிற நமக்கு அவர் ஆற்றல் எவ்வளவு அதிகம் என்பதையும் அறிந்திருக்கும்போதுதான் நாம் வலிமையுள்ளவர்களாய் செயற்கரிய செயல்களைச் செய்யமுடியும். அப்பொழுதுதான் மலைகளையும் இடம் பெயரக் கட்டளையிட முடியும். விசுவாசத்தின் மூலம் தேவ ஆற்றல் நம்மில் பாய்ந்தோடக்கூடும்.

3) கிறிஸ்துவுக்காய் பாடுகளைச் சகித்தல் :

விசுவாசத்தால் தொல்லைகளே நேரிடாது என்று எண்ணல் தவறு. நம் விசுவாசம் வளர வளர, நாம் பல வகைகளில் பாடுபட தேவன் அனுமதிக்கக்கூடும். அப்படித்தான் நமது விசுவாசம் பரிசோதிக்கப்படும், நாமும் விசுவாசத்தின் பொறுமையைக் கற்றுக்கொள்வோம். பரிசோதிக்கப்பட்ட விசுவாசமே புடமிட்ட பொன்னிலும் மேலானது. நீதியினிமித்தம் பாடுபடு... நற்பேறுபெற்றவன் விசுவாசி. உறுதியான விசுவாசமுடையவனே மகிழ்வுடன் துன்பங்களைச் சகித்துக்கொள்வான்.

ஆகவே, அருமை சகோதரனே, உனக்கு கிறிஸ்துவில் மனநிறைவு வேண்டுமாயின் அவருக்காய் அருஞ் செயல்கள் நீ ஆற்ற வேண்டுமாயின் கடினங்களைச் சகிக்கும் பொறுமை உனக்கு வேண்டுமாயின்; உனக்கு விசுவாசம் இருத்தல் வேண்டும்.

இந்தக் 'காக்கும் விசுவாசம்' பலருடைய வாழ்வில் மூன்று வகையான சூழ்நிலைகளில் காணப்படுகிறது.

1) பலருக்கு எல்லாம் நன்றாக வசதியாக பசுமையாக இருந்து மற்ற விசுவாசிகளும் சூழ இருக்குங்கால் விசுவாசிப்பது எளிதாக அமைகிறது.

2) சிலர் மட்டுமே அன்றாட வாழ்க்கையின் அலுவல்கள் மத்தியில் சிறப்பான நிகழ்ச்சிகள் இல்லாதபோதும், விசுவாசத்தால் தொடர்ந்து உறுதியாய் இருப்பர்.

ஆனால் ஆண்டவர் இதற்கும் மேலாக நம்மை அழைத்திருப்பது நம்மை இடுக்கண்களினூடேயும் நடத்துகிறார்.

3) இதுவே மூன்றும் வகை: நம் வாழ்க்கை ஓடம் புயலில் சிக்கி அலைகள் பயங்கரமாக மோதும்போது, தப்பும் வழியே இல்லை என்பது போன்ற சூழ்நிலையில் இருக்கும்போது அவரை உறுதியாய் நாம் பற்றியிருக்க வேண்டும். இதையே ஆண்டவர் விரும்புகிறார். இப்படிப்பட்ட கடவுள் பற்றே பவுலிடம் காணப்பட்டது. (அப்போஸ்தலர் 27 : 18-25) இவ்விதப் பற்று சோதனை அலையைப் பார்க்காமல் ஆண்டவரை நோக்கிப் பார்க்கிறது. இவ்வித விசுவாசம் மனிதரால் செய்யக்கூடாதவற்றையும் 'இது நடக்கும்' என அறிவிக்கிறது. இவ்வித விசுவாசம் பொதுமக்களுக்கு மதியீனமாய்த் தோன்றும். ஆனால் நாம் இவ்வித விசுவாசத்தையே கொண்டிருக்க வேண்டும்.

நண்பரே, விசுவாசம் தேவ ஆவியானவரின் செயலின் மூலம் உருவாகும் கனி. அதற்காக முயற்சிப்பதால் அதை நாம் பெறமுடியாது. முழுதும் பக்தருந்தவரான இயேசுவைப் பற்றிச் சார்ந்திருப்பதாலேயே அதை பெறலாம். ஏற்கெனவே உனக்குள்ள விசுவாசத்தை நீ பயன்படுத்தினால் உன் விசுவாசம் அதிகமாய் வளரும்.

நண்பனே, தேவன் உனக்கு இவ்வகைப் புரட்சியான விசுவாசத்தைக் கொடுக்கும்படி ஜெபிக்கிறேன். இரத்தச் சாட்சிகளுடன் இருந்தது விசுவாசம். இன்றைய இந்தியா இயேசுவின் நற்செய்தியின் வல்லமையைக் காண வேண்டுமானால் உன்னிலும், என்னிலும் இரத்தச் சாட்சிகளின் விசுவாசம் நிறைந்த வாழ்க்கை இருத்தல் வேண்டும்.

கிறிஸ்தவரின் ...

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை:

விசுவாசம்

1. விசுவாசம் ஏன் தேவை?

a) எபேசியர் 2 : 8 ____________________

b) எபிரேயர் 11 : 6 ____________________

c) யாக்கோபு 1 : 5 - 7 ____________________

d) யோவான் 11 : 40 ____________________

2. விசுவாசம் என்றால் என்ன?

a) எபிரேயர் 11 : 11 ____________________

b) எபிரேயர் 11 : 1 ____________________

c) ரோமர் 4 : 21 ____________________

3. விசுவாசம் என்ன செய்கிறது?
(or விசுவாசத்தின் செயல்கள் என்ன?)

a) ரோமர் 4 : 20 ____________________

b) எபிரேயர் 10 : 39 ____________________

c) மாற்கு 9 : 24 ____________________

4. தேவனை நாம் ஏன் விசுவாசிக்க வேண்டும்?

a) ரோமர் 4 : 18 ____________________

b) சங்கீதம் 23 : 4 ____________________

c) யோபு 2 : 7-10 ____________________

மனப்பாட வசனம் : யோவான் 11 : 40

விசுவாசிகளின் ஐக்கியம்

கிறிஸ்தவனின் இல்லம்

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளையே,

நீ எப்பொழுதாவது வீட்டின்மீது தேட்டமுடையவனாக இருந்துள்ளாயா? வீட்டினின்று நெடுங்காலமாக பிரிந்து உனது இல்லத்திலும், மேன்மையும் வசதியும் நிறைந்த இடத்தில் அமர்ந்திருப்பினும், உன் வீட்டிற்கு திரும்பிச் செல்லவே வாஞ்சிப்பாய். வீட்டிலே பல நெருக்கங்கள், தொந்தரவுகள் இருக்கலாம். பெற்றோரோடு இணங்கா நிலையும், சகோதர சகோதரிகளோடு சண்டையும் ஏற்படினும், நீ அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. வீட்டின் நிலை எத்துணை குறைபாடுள்ளதாயிருப்பினும், அதனையே உன் மனம் நாடும். இது இயல்புதான்.

நமது உடல், மனம், உணர்ச்சி, சமுதாயம் முதலியவை விருத்தியடைய ஒரு இல்லற வாழ்க்கை தேவை என்பதை தேவன் நன்கறிவார். அதற்கென்றே அவர் திருமணமும், குடும்ப வாழ்க்கையும் ஏற்படுத்தியுள்ளார். அவ்வண்ணமே நமது ஆன்ம வளர்ச்சிக்கும் ஓர் இல்லம் தேவை. இதற்காக விசுவாசிகளின் ஐக்கியத்தால் உண்டான சபையை தேவன் நியமித்துள்ளார். புதிய ஏற்பாட்டில் சபையை தேவனுடைய வீடு என்னும் ஒரு நாமத்தால் குறிப்பிட்டிருக்கிறது.

ஆவிக்குரிய முறையில் நாம் தேவனால் பிறக்கும்போது, நாம் தனித்திருக்க பிறக்கவில்லை. தேவனுடைய புத்திரர் அடங்கியுள்ள குடும்பத்தில் பிறந்துள்ளோம். புவியிலுள்ள இக்குடும்பம் குறைபாடுகள் அடங்கிய மக்களால் ஆனதாய் குறையுள்ளதாகவே தோற்றமளிக்கும். எப்படியிருப்பினும் இது அத்தியாவசியமானது. வேதத்தின் கருத்துக்கேற்ப சபையானது கிறிஸ்தவர் தொழுவதற்காக எடுப்பிக்கப்பட்ட கட்டிடம் அல்ல. இந்நாட்களில் இருப்பதுபோல் அது ஏதேனும் ஓர் பிரிவைச் சார்ந்ததும் அல்ல. ஒரு சபையானது சகல உத்தம கிறிஸ்தவர்களால் ஆனது. அது கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது. நாம் அதன் பற்பல அங்கமாக அமைந்துள்ளோம்.

கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு உரியவர்களாயிருப்பது ஒரு பெரும் பாக்கியமாகும். பிறந்து ஐக்கிய உறவின் மூலம் நாம் ஆத்தும ஆகாரத்தைப் பெறுகின்றோம். இவ்ஐக்கியம் ஆவிக்குரிய வளர்ச்சியை நம்மில் உண்டுபண்ணுகிறது. ஜெபிக்கவும், தேவனைத் தொழுதுகொள்ளவும், சேவிக்கவும், பிறரும் கற்றுக்கொள்கிறோம். நாம் தளர்ந்து மனச்சோர்வுற்றிருக்கையில் இவ்வித கூட்டுறவு நம்மை ஊக்குவிக்கின்றது. நாம் நெறி தவறிபோகையில்

படுத்துகிறார். சுருங்கக்கூறின் இயேசுவைப்போல நம்மை மாற்றி அமைக்க தேவன் இக்கிறிஸ்தவர்களின் ஐக்கிய கூட்டுறவையே பயன்படுத்துகிறார்.

இவ்வுலகத்தில் நமது உணர்ச்சிகளுக்கும், சமூக தேவைகளுககும் ஏற்ற ஓர் சூழ்நிலையை அமைத்துத் தருவது இத்தகைய கிறிஸ்தவ நட்பும் ஐக்கியமேயாம். இக்காரணங்களால் விசுவாசிகளின் ஐக்கியத்திற்காக நாம் தேவனை துதிக்க வேண்டும்.

ஆனால் அருமை சகோதரனே, இவ்ஐக்கியத்தில் பங்குபெறும் சிலாக்கியமானது சிற்சில பொறுப்புகளையும் பெற்றுள்ளது. பொறுப்பற்ற சிலாக்கியம் எதுவும் இருக்க இயலாது.

முழு மனதுடனும், கடமை உணர்ச்சியுடனும் பிற கிறிஸ்தவர்களோடு தொடர்பு கொள்வதே நமது முதல் பொறுப்பாகும். கூட்டங்களிலும், சபை அலுவல்களிலும் அவர்களுடன் கலந்துகொள். சாவதானமாய் தேவனை கடுத்த விஷயங்களைக் குறித்து உறவாட தனி நபர்களுடன் சிறிதுநேரம் செலவிடு.

இரண்டாவதாக உனக்குரிய ஐக்கிய குழுவின் ஐக்கியத்தை நிலைநாட்ட உழைக்கவேண்டும். சாத்தான் இதை எப்படி அழிக்கலாம் என எப்போதும் வகை தேடுகிறான். விசுவாசிகளின் பலவீன சுபாவத்தின் மூலமாயும, மற்றும் பிறத்தியாரின் பொய்கள் மூலமாயும் சாத்தான் தந்திரமாக இவ்ஐக்கியத்தில் நுழைகிறான். கவனத்தோடு அவனைப் பார்த்துக்கொள்! உன்னையோ அன்றி பிறரையோ அவன் பயன்படுத்தி இத்தகைய ஐக்கிய கூட்டுறவில் சமாதான கேடு உண்டுபண்ணிவிடாதே. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூறுவதன் மூலம் நாம் இயேசுவின் சீடர்களாயிருக்கின்றோம் என பிறர் அறிந்து கொள்வார்கள் என்று இயேசு பகர்ந்துள்ளார். தாழ்மையும், இரக்க சிந்தையும் பிறரை புரிந்துகொள்ளும் பண்பும், மன்னிப்பும், அன்புமாகிய இத்தன்மைகள் ஐக்கியத்தை நிலைநாட்ட இன்றியமையாதனவாகும். தேவனுடைய பிள்ளை ஒருவன் சமாதானம் பண்ணுகிறவனுயிருக்கவேண்டும்.

மூன்றாவதாக, நீ சேர்ந்துள்ள ஐக்கிய குழுவின் ஆராதனையிலும் முழு பங்கு பெற்று அதில் நீ ஏற்கவேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொள். இத் திரு சரீரமாகிய சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு சேவை உண்டு.

ஒருவர் சேவை மற்றவர் சேவையைப் போன்று பெரிதன்று என்றபோதிலும், நம் கடமைகளில் மன உத்தமத்தோடிருக்க தேவன் விரும்புகிறார். சிறிய பொறுப்பில் காண்பிக்கும் நேர்மையைக்கண்டு தேவன் நம்மிடம் கூடுதலான பொறுப்பை நம்மிடம் ஒப்படைக்கலாம். இவ் ஐக்கியத்தில் எப்போதும் பெற்றுக்கொண்டேயிருப்பினும் ஒருபோதும் ஈயாது வாழும் மர ஓட்டுனிபோல் இராதே. சரீரமாகிய சபையின் பக்திவிருந்திக்கு அனுகூலமாய் இருக்க கூடிய ஒரு ஈவை பரிசுத்த ஆவியானவர் உனக்கு அருளும்படி நீ அவரை வேண்டிக் கொள்ளவேண்டும். ஆனல் இச்சபையில் லௌகீக ஆவியான பாரபட்சமும் தகாத உறவும் நுழையாவண்ணம் நாம் விழிப்பாய் இருக்க வேண்டும். செல்வந்தர்களும், ஏழைகளும், படித்தவரும், படிக்காதவரும்

தேவனுடைய பார்வையில் சமமாக நடத்தப்பட வேண்டும். ஆனால் நம் தலைவருக்கு ஏற்ற கனமும், மரியாதையும் செலுத்த வேதம் நம்மை போதிக்கிறது.

உனது ஐக்கிய சங்கத்தில் உன்னைப் பார்க்கிலும், பலவீன பாண்டங்களாகிய சில கிறிஸ்தவர்கள் இருக்கலாம். நீ அவர்களுக்காகவும் கவலைப்பட வேண்டிய அவசியம் உண்டு. விழிப்பாயிரு. உன் வாழ்க்கை அவர்கள் இடறுதற்கேதுவாக இருக்கலாகாது. பலவீனரை இடறபண்ணுவோருக்குக் கடினமான தண்டனையை இயேசு எச்சரிப்பாக பகர்ந்துள்ளார் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

முடிவாக தகாத நண்பர்கள் நமக்கு இருக்கலாகாது என வேதம் கூறியவற்றை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஏமாந்துபோகவேண்டாம். தகாத நண்பர் நற்பண்புகளைப் பாழாக்கக்கூடும். (1 கொரியத்தியர் 15:33) துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருப்போனே பாக்கியவான் என சங்கீதகாரன் கூறுகிறார்.

எனவே ஒருவன் மனந்திரும்பிய வாழ்க்கையில் ஈடுபட்டதும் தன் தோழரை விட்டுவிடவேண்டுமோ? சகோதரனே, முதற்கண் நீ செய்யவேண்டியது யாதெனில் அவர்களுக்காக நீ ஜெபித்து அவர்கள் கிருஸ்துவைக் கண்டடைய ஆதாயப்படுத்திக்கொள்வதால் உன் நட்பானது கிருஸ்தவ நட்பாகும். ஆனால் அவர் தம் தீய நடக்கையிலே தொடர்ந்து செல்ல தெரிந்துகொள்வாராயின், நீ அவர்கள் கூட்டுறவை விட்டுப் பிரியவேண்டுமென வேதம் தெளிவாக கூறுகிறது.

உத்தம கிறிஸ்தவர்களின் கூட்டுறவினால் ஏற்படும் ஐக்கியமும், அதனால் உண்டாகும் மகிழ்ச்சியையும் தேவன் உனககு அருள்வாராக.

அவரது ஐக்கியத்திலுள்ள

விசுவாசிகளின் ஐக்கியம்

1. எத்தகைய நண்பரை ஒரு கிறிஸ்தவன் தவிர்க்க வேண்டும்?

a) சங்கீதம் 1 : 1 (a)____________

b)____________

c)____________

b) எபேசியர் 5:5-7____________

c) 1 கொரிந்தியர் 5 : 9 - 11____________

d) நீதி மொழிகள் 14 : 7____________

2. ஏன் தகாத தோழரை விட்டு நீங்க வேண்டும்?

a) 1 கொரிந்தியர் 15 : 33 ____________

b) 2 கொரிந்தியர் 16:14-17 ____________

3. எத்தன்மையரான தோழரை ஒரு கிறிஸ்தவன் வைத்துக்கொள்ள வேண்டும்?

a) யோவான் 13:34-35____________

b) நீதி மொழிகள் 27:5, 6, 9____________

c) நீதி மொழிகள் 27 : 17 ____________

4. ஏன் கிறிஸ்தவ சிநேகிதர் தேவை?

a) எபேசியர் 1 : 19-22 ____________

b) 1 கொரிந்தியர் 12 : 26, 27____________

c) யோவான் 17:11____________

d) பிலிப்பியர் 2 : 1-3____________

5. கிறிஸ்தவ ஐக்கியத்தில் நாம் செய்யவேண்டியதென்ன?

a) எபேசியர் 5 : 19 ____________

b) எபிரேயர் 3 : 13____________

c) எபிரேயர் 10:24 25____________

d) ரோமர் 14 : 1; 15 : 1____________

சேவை: கிறிஸ்தவனின் சிலாக்கியம்

அன்பான விசுவாசியே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நீ உன் சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டு அவரை நம்பிய காலமுதல் நீ தேவனேடுள்ள புதிதும், அதிசயமுமான கூட்டுறவை அனுபவித்து வருகின்ருய். நீ தேவனுடைய பிள்ளையாகவும், ஸ்தாணுதிபதியாகவும் இருக்க அதிகாரம் பெற்றுள்ளாய். "தேவனேடு உடன் வேலையாட்களாயிருக்கிறேம்" என பவுல் கூறுகிருர். தேவனை சேவிக்க வேண்டும் என்ற விருப்பமானது உனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஓர் அத்தாட்சியாக இருக்கிறது எனவே இக்கடிதத்தில் தேவன் நம்மை அழைக்கின்ற சேவையின் சிலாக்கியத்தைக் குறித்து சற்று சிந்திக்கப்போகிறேம்.

தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டபோது அவர் பார்வோனிடம் கூறியது யாதெனில் "எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போகவிடு" என்ருர். விடுதலை பெற்ற மக்கள் மட்டுமே தேவனை சேவிக்க முடியும் நாம் அன்பும், நன்றியும் படைத்த உள்ளத்தோடு அவருக்கு சேவை செய்யும் பொருட்டு இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் நம்மை பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியுள்ளார்.

தேவனுக்கு சேவை செய்வதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை அமைந்துள்ளது, அவர் தமது பரம பிதாவை சேவித்த முறையில் மூன்று முக்கிய குறிப்புக்களைக் காண்கிறேம்.

1. முழுமனதுடனே சேவை செய்தார்!

"நான் என்னை அனுப்பியவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என இயேசு கூறியுள்ளார். தேவனுக்கு சேவை செய்வதே அவரது வாழ்க்கையில் முதலிடம் பெற்றுள்ளது அவரது அன்ருட உணவைக்காட்டிலும், தேவனைச் சேவிப்பது அவருக்கு மிக முக்கியமாகத் தோன்றிற்று. இத்தகைய சேவையை அவர் நம் ஒவ்வொருவரிடமும் பெற்றுக்கொள்ள விரும்புகிருர். இதற்காக சொகுசான வாழ்க்கைக்கு அனுகூலமாயிருக்கக்கூடிய நல்ல ஊதியம் பெறும் வேலையை விட்டுக் கொடுக்க வேண்டியதாகும். அன்றி தடையின்றி தேவனுக்கு ஊழியம் செய்யும் பொருட்டு திருமண வாழ்வில் இறங்கும் எண்ணத்தைத் தள்ளிவைக்க வேண்டியதாகும். C. F. Andrews கூறியுள்ள தீனபந்து என்பவன் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்டோருக்கு சேவை செய்யும் பொருட்டாக தேவன் தன்னை அழைத்தாரென அறியும்போது குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் எண்ணம் முழுமையையும் விட்டுக் கொடுத்தான். தேவன் வெவ்வேறுனவர்களை வெவ்வேறு வழியில் நடத்துகிருர். ஒரே வகையான தியா

கத்தை எல்லாரிடமும் அவர் விரும்பவில்லை. அவர் அழைககும் சேவை இடையூருக இருக்கக்கூடிய எதையும் நாம் விலக்கி வைக்க தயாராக இரு வேண்டும்.

2. தன்னையே தத்தம் செய்யும் சேவை !!

'' அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி — அடிமையின் ரூபமெடு — தம்மைத்தாமே தாழ்த்தி கீழ்ப்படிந்தவரானுர் ''. சுய வெறுப்பு, தாழ் கீழ்படிதல் என்பவை தேவனுடைய உண்மையான ஊழியக்காரனின் பண் களாகும். இவை நடைமுறையில் காண்பிக்கப்படவேண்டும். இயேசு தம சீடரின் பாதங்களைக்கழுவினுர். இயேசுவின் இம்முன்மாதிரியைப் பின்பற் பிராமண புலவராகிய நாராயிணன் திலக் என்பவர் வாதையினுல் பீடிக் பட்டோரை பராமரித்து சிகிச்சை கொடுத்து உதவினுர். கிறிஸ்துவை அ வதற்கு முன் இத்தகைய வேலை அவரது அந்தஸ்துக்கும், மதிப்பிற்கும் இ வானதாகவும், அசுத்தமானதாகவும் கருதப்பட்டது.

3. உண்மையும் துப்புரவும் !!!

"நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் என இயேசு கூறியுள்ளார். அவர் உத்தமமாக தமது ஊழியத்தைச்செய் முடித்தார். கலப்பையின்மீது நமது கையை வைத்து பின்னிட்டுப் பா பதைக் குறித்து, இயேசு நம்மை எச்சரித்துள்ளார். முடிவுவரை விடாமுய சியுடனும் சகிப்பு தன்மையுடனும் தொடர்ந்து செய்யாத ஊழியம் நல்ல ஆர முடையதாயிருப்பினும், பயனற்றதாகக் காணப்படும். முழுமனதுட தாழ்மை, விடாமுயற்சியுடனும் கூடிய சேவையானது முடிவிலோ " நல்ல உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே " என அவர் கூறும் அ நாளிலே நிச்சயமாய் பிரதிபலன் கொண்டுவரும். கிறிஸ்துவைச் சேவிப்பத கருத்தென்ன ? இன்று கிறிஸ்து உலகத்தில ஆற்றிவரும் பணியில் நாமு சேர்ந்துகொள்வதேயாகும். அடிப்படையாக தேவன் சபையைத் தன் யிலும் அளவிலும் கட்டிக்கொண்டு வருகிறுர். நாமும் தீவிரமாக சுவிசே ஊழியத்தில் செயல்பட்டு பிற ஆத்துமாக்கள் பாவத்தினின்று கிறிஸ்துவை சேர ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும். நீங்கள் எனக்கு சாட்சிகளாயி பீர்கள் என இயேசு கூறும்போது அவரே ஆண்டவரும் இரட்க்ஷகருமாயி கிறுர் என்பதற்கு சாட்சி பகர வேண்டும் எனக் கருதினுர். நாம் இரு மு களில் சாட்சி பகருகிறேம் :—

(i) வார்த்தையினுலே : என்பது கிறிஸ்துவைப் பற்றி நாம் அனுபோக தில் கண்டவைகளை எடுத்துரைப்பதேயாகும். அன்றி வேதத்திலுள் போதனைகளையும் வாக்குத் தத்தங்களையும், பிறருக்கு எடுத்துக்கூறி அ களை நம்புமாறு வேதத்தை அறிமுகப்படுத்துவதாகும். இதற்கென வேதத்தை நன்கு ஆராய்ந்து கற்று ஆயத்தம் செய்யவேண்டும். தே னுடைய வார்த்தைகளை எவ்வளவுக்கு அறிந்து கொள்ளுகிறே அவ்வளவுக்கு நாம் அவரை ஏற்றபடி சேவிக்க இயலும். இதற்கென மக்க சந்தித்து அவர்களோடு உறவாடவும் நேரம் செலவிட வேண்டும். ஆராய்ச்சிக்கென உன் நண்பர்களில் சிலரை நீ உன் அறைககாவது, விடு

வது அழைக்கமுடியுமா? இத்தகைய அறை குழு கிறிஸ்துவின் மீட்பின் வல்லமையை பிற நண்பர்களுக்கு எடுத்துரைக்க ஏற்ற சந்தர்ப்பம் அளிக்கின்றது.

(ii) உன் வாழ்க்கையின் மூலம் :— இயேசுவே இரட்க்ஷகர் என நாம் சாட்சி பகருவோமாயின் நம்மை அவர் இரட்க்ஷித்திருக்கிறார் என்பதற்கு நம் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். இயேசுவைப் பின் செல்கின்றோம் என்போரிடம் மக்கள் கிறிஸ்துவைப் போன்ற தன்மைகளை எதிர்நோக்குகின்றனர். இப்பண்புகள் இல்லையேல் நாம் கூறுபவற்றிற்கு அவர் தம் செவி சாய்ப்பதில்லை. நீ மாணவனாக இருப்பின் உத்தமமும், ஊக்கமுமான படிப்பினாலே தேவனை சேவிக்க முடியும். உன் பயிற்சியிலும் பணியிலும் நீ பெறக்கூடிய உயர் தரமதிப்பெண்ணையும் நிலையையும்பெற்றுக்கொள்ளலாம். இதனால் நீ தலைமை வகிக்கும் வாய்ப்பைப் பெற்று எதிர்காலத் தொழிலில் பிறரைக் கவர்ந்துகொள்ள ஏதுவாயிருக்கும். இன்று இந்தியாவில் தேசிய தலைமை தாங்கும் தானங்களில் உத்தமமும், நேர்மையும் உடையவராய் தமக்கென சாட்சி பகர திறமை வாய்ந்த ஆடவரையும் பெண்டிரையும் தேவன் விரும்புகிறார். ஒவ்வொரு விசுவாசிககும் அவர் ஒரு பிரத்தியேகமான சேவையைத் திட்டமிட்டு வைத்திருக்கிறார். அவரது சித்தத்தை அறிந்து செய்ய விரும்புவோரை அவர் தக்க பயிற்சியிலும் பணியிலும் நடத்தி தமக்கென சாட்சிகளாக நியமிக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள் என இயேசு தமது சீஷர்களுக்கு வாக்கு மொழிந்தார். ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரே அவனை வழி நடத்தி கர்த்தருடைய பணிக்கென பெலப்படுத்துவார். நீ அவரை சார்ந்திருக்கையில் "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" என கூற இயலும். நாம் தேவனுடைய அன்பின் கட்டுக்குள்ளான அடிமையானபடியால் மகிழ்ச்சியோடே தேவனுக்கு சேவை செய்வோமாக.

அவரது பணியாளானதால்
உனது சகோதரன்

சேவை : கிறிஸ்தவனின் சிலாக்கியம்

1. ஏன் நாம் தேவனை சேவிக்க வேண்டும் ?

a) யோவான் 14 : 23

b) யோவான் 15 : 8

c) யோவான் 15 : 16

d) ரோமர் 12 : 1

e) 1 கொரிந்தியர் 6 : 19, 20

2. நாம் கிறிஸ்துவை சேவிக்க வேண்டுமானால் அத்தியாவசியமாய் நம்மிடம் இருக்கவேண்டியவை எவை ?

a) 1. தீமோத்தேயு 1 : 19

b) 1. தீமோத்தேயு 4 : 12

c) 2. தீமோத்தேயு 1 : 6

d) 2. தீமோத்தேயு 2 : 3 4

e) 2. தீமோத்தேயு 2 : 15

f) 2. தீமோத்தேயு 2 : 2(1

g) 2. தீமோத்தேயு 2:24, 25

3. நாம் எப்படி தேவனை சேவிக்கிறோம் ?

a) மத்தேயு 25 : 35-40

b) யூதா 1 : 23

c) யாக்கோபு 5 : 19 - 20

d) 1. தீமோத்தேயு 4 : 12

e) 2. கொரிந்தியர் 9 : 7 - 15

f) ரோமர் 12 : 1 - 2

4. கிறிஸ்துவை சேவிப்பதினால் வரும் பயன்கள் எவை ?

a) தானியேல் 12 : 3

b) மாற்கு 10 : 29 - 30

c) 1. தீமோத்தேயு

d) 2. தீமோத்தேயு 4 : 7 - 8

திருமறையை விளக்கும் முறை

- வி. கர்ட்

நமது வெளியீடுகள்

ஜெப முரசு

மாணவ பட்டதாரிகள் நற்பணிபற்றி அறிய, இப்பணிக்காக ஜெபிக்க, ஆவிக்குரிய வளர்ச்சி அடைய திட்டமாக நீங்கள் பெறவேண்டிய மாதாந்திர ஜெப செய்தி மலர் "ஜெப முரசு"

சந்தா விபரம் :

மாணவர்க்கு ரூ. 3-00. பட்டதாரிகளுக்கு ரூ. 5-00.

பாடுவோம் நற்செய்தியை

தேவனைக் கருத்தோடும் ஆவியோடும் துதித்துப் பாடி மகிழ, உங்கள் கையில் இருக்கவேண்டிய சிறப்புப் பாடல் புத்தகம் "பாடுவோம் நற் செய்தியை". மூன்றாவது வெளியீடு இப்போது தயாராகிறது.

துண்டுப் பிரதிகள்

மாணவர்களுக்கு என்று தயாரிக்கப்பட்ட சிறப்புத் துண்டுப் பிரதிகள்.

திருமறையை விளக்கும் முறை

திருமறையை சரியாக விளங்கிக்கொள்வது எப்படி விளக்குவது எப்படி என்று தெரிந்துகொள்ள நீங்கள் வாசிக்கவேண்டிய புத்தகம் "திருமறையை விளக்கும் முறை". இப்புத்தகத்தில் உள்ள வேத பாடங்களையும், உங்கள் கேள்விகளையும் அலுவலகத்திற்கு அனுப்புங்கள்.

அலுவலகம் :

UESI-TN Office, Guru Medical Hall, Tiruchy-620 017

ஜெபியுங்கள்

- ★ கல்லூரிக்கோர் ஜெபக்குழு
- ★ விடுதிக்கோர் வேத ஆராய்ச்சிக்கூட்டம்
- ★ இச்ஜெபக் குழுவுக்கு உதவிசெய்ய தலைவர்கள்
- ★ இடத்திற்கோர் பட்டதாரிகளின் ஐக்கியக் குழு
- ★ TNEGF புதிய சிறப்பு வெளியீடுகள்